**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**அலுவலக ஆணை எண்.92, நாள்: 08.06.2018**

பொருள்:- பணியாளர் துறை - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் - அலுவலர்கள் / பணியாளர்கள் செலுத்த வேண்டிய அல்லது நேர் செய்ய வேண்டிய நிலுவைத் தொகையினை செலுத்தவோ / நேர் செய்யவோ ஏதுவாக "பணியாளர் துறை" தொடர்புடைய கோப்பினை முன்னதாகவே சமர்ப்பித்து சரி செய்தல் - தொடர்பாக.

--------

தேர்வாணைய அலுவலகத்தில் பணிபுரியும் ஒரு சில அலுவலர்கள் / பணியாளர்கள், அவர்கள் செலுத்த வேண்டிய அல்லது நேர் செய்யப்பட வேண்டிய நிலுவைத் தொகையினை அவர்கள் ஓய்வு பெறும் நாள் வரை திரும்ப செலுத்தாமலோ/ நேர் செய்யப்படாமலோ நிலுவையில் வைத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இது தொடர்பாக, இனி வருங்காலங்களில், ஓய்வு பெறவிருக்கும் அலுவலர்கள்/பணியாளர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய நிலுவைத் தொகையினையும், நேர் செய்யப்படாத தற்காலிக முன்பணத் தொகையினையும் செலுத்துவதற்கு ஏதுவாக தொடர்புடைய பணியாளர் துறை (PD) மற்றும் பட்டி மற்றும் வரவுத் துறை (BRD) பிரிவுகள், மேற்படி அலுவலர்கள்/ பணியாளர்கள் பணி ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக பரிசீலிப்பதற்கு ஏதுவாக கோப்பினை சமர்ப்பித்து, சம்மந்தப்பட்ட அலுவலர் / பணியாளர் செலுத்த வேண்டிய அல்லது நேர் செய்ய வேண்டிய நிலுவைத் தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

இனிவருங்காலங்களில், பணியாளர் துறை (PD), ஓய்வுபெறும் நபர் தொடர்புடைய நிலுவைத் தொகை ஏதேனும் உள்ளதா என்பது தொடர்பான விவரங்களை மூன்று மாதங்களுக்கு முன்பாகவே BRD பிரிவிடம் கேட்டறிந்து, அந்நபர் ஓய்வு பெறுவதற்கு முன்னர் நிலுவைகள் ஏதும் இல்லாமல் நேர் செய்துகொள்ள பணியாளர் துறை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

க. நந்தகுமார், இ.ஆ.ப.
செயலாளர்